புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 December 2023 ISSN: 2456-821X

# தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றில் வேடியப்பன் வழிபாடு

முனைவர் ந.குப்புசாமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை – 606 603.

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியத்தில் ஆநிரைப் போர் இடம் பொற்றிருப்பது நாமறிவோம். ஆநிரைப் போரில் மாண்டோருக்கு நடுகல் எடுக்கும் வழக்கத்தையும் அந்நூல் குறிப்பிடுகிறது. நடுகல் வழிபாடு மக்களிடையே பெருவழக்காக இருந்ததற்கு பல்வேறு ஆதாரங்கள் கிடைக்கின்றன. தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதுமே வீரவழிபாடு இருந்துள்ளது. நடுகற்களைக் குறிப்பிடும்போது எழுத்தையோ, உருவத்தையோ முன்னோர்கள் அதிகம் குறிப்பிடவில்லை. மாறாக சடங்குகளையே குறிப்பிடுகின்றனர். சடங்கு என்பது நம்பிக்கைr; சார்ந்தும், வாழ்வியல் சார்ந்தும் அமைவன. அது ஒருவகைப் பண்பாட்டின் கூறாக வளர்வதை உற்று நோக்கி அறிவது இவ்வாய்வாகும். அவற்றோடு தமிழ்ப் பண்பாடும் ஒரு நிலை வீரயுகப் பண்பாடு என்பதை நிறுவுவதும் இவ்வாய்வின் பணியாகும்.

திறவுச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. வேடியப்பன் | – | நடுகல் தெய்வம், வெட்சி, கரந்தை போரில் இறந்து போன வீரனுக்கு எடுப்பித்த நடுகல் |
| 2. வீரயுகம் | - | மறத்தன்மை பொரிதெனக் கருதும் மக்கள் வாழ்ந்த காலம் |
| 3. ஆநிரைப்போர் | - | வெட்சி, கரந்தைப் போர்கள் |
| 4. தெவ்வர் | - | பகைவர் |
| 5. பொறிகிளர் | - | புs;spயை உடைய |
| 6. கருங்கால் | - | அடிபருத்து கருத்திருத்தல் |
| 7. குருந்து | - | குரவம், குரா, குருந்தம், புன எலுமிச்சை |

## முன்னுரை

புறநானூற்றில் 335 ஆம் பாடலில் மாங்குடி மருதனார் குருந்து, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை பூக்களைத் தவிர வேறு வாழ்வியல் திணையைக் குறிக்கும் பூக்கள் இல்லை. வரகு, தினை, கொள், அவரை என்னும் நான்கு அல்லாத வேறு உணவுப் பொருளும் இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்னும் நான்கு இனக் குடிமக்கள் அல்லது வேறு குடிகள் இல்லை ஆனால் இவையெல்லாம் நான்காக உள்ளபோதும் அவர்களுக்குக் கடவுள் மட்டும் ஒன்றே அந்த ஒன்றும் நடுகள் வாளேந்திg; போர்க்களம் சென்று பகையரசரின் களிற்றை வீழ்த்திவிட்டு மாண்டுபோனவனுக்கு நடப்பட்ட நடுகல் அது

''அடலருந் துப்பின்....
..... குருந்தே முல்லை என்று
……………………………………………….
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே''[1]

என்று நடுகல் வழிபாட்டை தமிழர்களின் பழமையான வழிபாடாக வலியுறுத்திப் பாடுவதைக் காணமுடிகிறது. தொல்காப்பியம், திருக்குறள் என தமிழர்களின் அறிவு சார்ந்த நூல்கள்

அனைத்தும் நடுகல் வழிபாட்டை தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதைj; தெரிவிக்கின்றன. அந்த வரிசையில் வடதமிழகத்தின் தனித்த அடையாளமாகக் கருதப்படும் வேடியப்பன் என்கிற நடுகல் வழிபாட்டோடுத் தொடர்புடைய பண்பாட்டு மரபை ஆராய்கிறது இக்கட்டுரை.

வேடியப்பன் வழிபாட்டில் ஒன்றிணையும் மக்கள்

செங்கம் வட்டாரத்தில் பிறப்பின் அடிப்படையில் உருவான பல்வேறு சாதிமக்கள் வாழ்கின்றனர். தொழில் சார்ந்து மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகளும் உண்டு. இருந்தும் இவ்வட்டார மக்கள் வேடியப்பன் வழிபாட்டு நம்பிக்கையில் ஒருவாறு ஒன்றுபடுகின்றனர். வேடியப்பனை வேண்டினால் மழைவரும் என்றபோது அனைத்து சாதிமக்களும் ஒன்றிணைவது பார்க்கமுடிந்தது. கனவில் வருதல், நோய் தீர்த்தல், தீயோர்களை தண்டித்தல் என்பன அனைத்து இனமக்கள் இடத்தும் உள்ள வேடியப்பன் பற்றிய நம்பிக்கையாகும்.

வன்னியர், ஆதிதிராவிடர், அருந்ததியர், யாதவர், வேளாளர், முதலிய சாதிகள் குலதெய்வமாக, இனத்தெய்வமாக, காவல்தெய்வமாக, ஊர்த்தெய்வமாக வணங்குகின்றனர். வண்ணார், அம்பட்டர், செட்டியார், முதலியார் ஊர்த்தெய்வமாகவும், காவல்தெய்வமாகவும் வணங்குகின்றனர். ஒரே ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட வேடியப்பன் இருப்பதும் உண்டு. சாதி ரீதியாக தனிக்கோயில் உண்டாக்கி வணங்குவோரும் உள்ளனர். ஆதிதிராவிடர் மக்கள் முன்னூர்மங்கலத்தில் தனியாக வேடியப்பன் சிலை வைத்து வழிபடுகின்றனர். இவ்T+h; வேடியப்பன் சிலை உருவம் இல்லை. சாதாரண குத்துக்கல் மரத்தடியில் நடப்பட்டுள்ளது. இதையே தங்களுக்கான வேடியப்பனாக ஆதிதிராவிடர் வழிபடுகின்றனர்.

நாட்டுப்புறக் கதைமரபு

இந்தியாவைக் கதைகளின் தாயகம் என்று சொல்லுவார்கள். பண்டையக் காலந்தொட்டே இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு கதைகள் வழங்கிவருகின்றன. நம் நாட்டுக்கதைகள் பலவும் பிற நாடுகளுக்குப் பரவிச் சொன்றுள்ளன. தமிழகத்தின் கிராமப்புறங்களில் தாத்தா-பாட்டிமார்கள் பேரக்குழந்தைகளுக்குப் பொழுதுபோக்காக எடுத்துரைக்கும் கதைகள் வற்றாத கற்பனைச் செல்வங்களாக ,ன்றும் பயன்பட்டுவருகின்றன. அக்கதைகளுக்குப் பெரும்பாலும் புனிதத்தன்மையும், சடங்கியல் தன்மையும் இல்லாவிட்டாலும் நீதிபோதிக்கவும் நம்பிக்கைகளைப் பாதுகாத்து வைக்கவும், பொழுதுபோக்கவும் பயன்படுகின்றன. மற்ற நாட்டுப்புற இலக்கிய வகைகளைக் காட்டிலும் கதை இலக்கியம் இடப்பெயர்ச்சி செய்து பரவும் இயல்பைக் கொண்டவை. இயற்கை வளம், பிறப்பு, இறப்பு, வரலாற்று உண்மைகள், வன்கொடுமைகள், வீரதீர செயல்கள் போன்றனவற்றை இக்கதைகள் விளக்குகின்றன.

”பொருள் மரவில்லாப் பொய்மொழி யானும்
பொருளொL புணர்ந்த நகைமொழி யானும்”[2]

என்று தொல்காப்பியர் இருவகையான உரைகளில் அமைந்த கதைகளைக் கூறுகிறார். அவை பொருளில்லா கட்டுக்கதைகள் என்றும், பொருள் உள்ள நகைக் கதைகள் என்றும் பகுக்கப்படுகின்றன. நாட்டுப்புறக் கதைகளின் தோற்றம் பற்றியும் அவற்றின் வகைப்பாடுகள் குறித்தும் பல்வேறு அறிஞர்கள் பலவாறான கருத்துக்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளனர்.

”இன்றைய நாவலையும் சிறுகதையையும் போன்றுதான் இந்த நாட்டுப்புறக் கதைகள் உள என்றாலும் இவை குறிப்பிட்ட ஒருவரால் எழுதப்படாதன. ஏட்டில் இடம் பெறாதன. வாய்வழியாக வாழ்வன. உருவம் தேய்ந்தும் வளர்ந்தும் நிலையற்ற வடிவைக் கொள்வன. இவ்வாறு பல வேறுபாடுகளைக் காணும் வகையில் இவை அமைந்துள்ளன”[3]

நாட்டுப்புறக் கதைகளை ஆய்வு செய்தோர் அவற்றை பல்வேறு வகைப்படுத்தியுள்ளனர். சு.சண்முகசுந்தரம் நான்கு வகையாகப் பகுக்கின்றார்.

1. மனிதக்கதைகள்
2. மிருகக்கதைகள்
3. மந்திரக்கதைகள்
4. தெய்வக்கதைகள்[4]

”தமிழ் நாட்டுப்புறக் கதைகள் பல்வேறு அணுகுமுறைகளில் ஆராயப்பட்டுள்ளன. உளவியல் பார்வை, அமைப்பியல் ஆய்வு எதிர்வு அமைப்புமுறை, உடல்மொழி, பெண்ணிய நோக்கு, வரலாற்று நிலவியல் முறை ஆகிய கோணங்களில் ஆராயப்பட்டுள்ளன என்கிறார் அ.பிச்சை”[5]

*இவற்றோடு ஒவ்வொரு வட்டாரத்திலும் வழங்கும் நாட்டுப்புற கதைகள் தொகுக்கப்பட்டு வருகின்றன. கி. இராஜநாராயணன் கரிசல் காட்டுக் கதைகள் என்ற பெயரில் கதைகளைத் தொகுத்தார். பிறகு வயதுவந்தோர்க்கு மட்டும் எனும் பெயரில் பாலியல் கதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். பல்கலைக்கழக ஆய்வாளர்கள் சிலரும் கதைகளை சேகரித்து ஆய்வு செய்துள்ளனர். நாட்டுப்புறக் கதைகள் அமைப்பு நிலையில் நீதிக்கதை, பழமரபுக் கதை, புராணக்கதை என்ற நிலையிலே அமையும். இவற்றின் தொடக்கம் கேட்பவரின் மனநிலைக்கும், சொல்பவரின் திறனுக்கும் ஏற்ப இருக்கும். ''முன்னொரு காலத்தில், ''ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான்'', ''ஒரு ஊாரில் ஒரு வணிகன் இருந்தான்'' என்றவாறு தொடங்கி இறுதியல் ஒரு நீதியைச் சொல்லி முடியும், சில கதைகள் ஒரு பழமொழியின் விளக்கம் போன்றே அமையும்.*

*தெய்வம் பற்றியக் கதைகள்*

*தெய்வம் பற்றிய கதைகளை இயற்கை இறந்த கதைகள் (Super Natural tales) என்று கூறலாம். இவ்வகையான கதைகளில் தெய்வங்கள் நேரடியாக மண்ணில் தோன்றி மாந்தர்களாக உலவுவதாகக் கூறுவது ஒருவகை. அப்போது மாந்தர்களாக இருப்பினும் கடவுளின் அவதாரம் என்பதை உணர்ந்தே இருந்தனர். இராமாயண, மகாபாரதக் கதைகள் நாட்டுப்புறங்களிலும் உண்டு. அவற்றில் இராமன், கண்ணன் போன்றோர் மனிதர்களாக தோன்றினாலும் கடவுளாகக் கருதப்பட்டனர். இரண்டாவது நிலையில் மனிதர்களாக வந்தோர் நற்பண்புகளால் கடவுளாகக் கூறுவது ஒருவகை. நல்லதங்காள், முத்துப்பட்டன், பொன்னர், சங்கர் கதைகளில் வருவோர் இறந்து தெய்வமானதாகக் கூறப்படுகிறது. தெய்வம் பற்றியக் கதைகளில் தெய்வங்கள் மக்களுக்கு வழிகாட்டுவதோடு, வரம் தருவதாகவும் அமைத்துக் கூறுகின்றனர்.*

*பத்மாசூரன் என்று ஓர் அரக்கன். இவன் சிவனை நோக்கி ஏழு ஆண்டுகள் கடுமையான தவம் இருந்தான். மரக்கட்டை நட்டு அதன்மேல் நின்று கொண்டு தவமிருந்தான். அவன் தவ வலிமையை ஏற்று சிவன் ரிஷப வாகனத்தில் வந்துக் காட்சி கொடுத்தார். என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு சூரன் நான் யார் தலையில் கைவைத்தாலும் அவர்கள் எரிந்து சாம்பலாகப் போக வேண்டும் என்ற வரத்தைக் கேட்டான். அவரும் அப்படியே ஆகட்டும் என்கிறார்.*

*அப்போது ஒரு ஏழைக்கிழவன் தன் தோட்டத்தில் பூ நட்டுக்கொண்டு இருந்தான். வோர்ப் பகுதியை மேலும், இலை குருத்துப்பகுதியை கீழாகவும் கொண்டு தலைகீழாக நட்டுவந்தான். சூரன் அதைப்பார்த்து ஏய் கிழவா என்ன உன் கொடுமதி இப்படி செய்கிறாய் என்றான். அதற்கு கிழவன் எல்லாம் நீ வரம் வாங்கினது போலத்தான் நானும் நீ போய் எவன் தலைமேலாவது கை வைத்துப் பார் அப்ப தெரியும் அப்படின்னு சொன்னார்.*

*சூரனுக்கு கோபம் வந்துவிட்டது. வரம் கொடுத்த ஈசுவரன் மேலே கைவைக்கப்போனான். ஈசுவரன் பயந்து ஓடினார். சூரன் பின்னால் விரட்டுகிறான். ஈசுவரன் அய்வேலங்காயில் சென்று மறைந்துகொண்டார். சூரன் வெள்ளாட்டுக்கிடாய் வடிவம் கொண்டு அக்காய்களை மென்று தின்ண ஆரம்பித்துவிடான். ஈசுவரன் தன் மச்சானை நினைத்து வேண்டினார். சிவன், திருமால் இருவரும் மாமன் மச்சான் உறவுமுறையினர். ஏழுமலையான் பத்து அவதாரம் எடுத்தவர். தன் மாமனின் நிலையை உணர்ந்து, உடனே மோகினி அவதாரம் எடுத்து சூரனின் முன்பு சென்று நின்றார்.*

*மோகினியைக் கண்ட சூரன் அவளோடு சேர ஆசை தெரிவித்தான். அதற்கு மோகினி நீ நீண்ட நாள் காட்டில் இருந்துள்ளாய். போய் குளித்து சுத்தமாக வா என்றாள். சூரன் நீரைத்தேடி ஓடினான். அப்போது ஏழுமலையான் தன் தங்கையான பூமாதேவியை அழைத்து, எல்லா நீரினையும் உள்ளே இழுத்துக்கொள்ளும்படி கூறினார். அவளும் எங்கும் நீர் இல்லாதபடியும், சூரனின் கண்ணிற்கு நீர் தெரியாதவாறும் செய்துவிட்டாள். பத்மாசூரன் நீர் தேடி அலைந்து திரிந்து களைத்து வந்தான். எங்கேயும் இந்தக் காட்டில் நீர் இல்லை என் செய்வது என்றான். அதற்கு மோகினி எங்காவது காட்டில் சிறிதளவு நீர் இருந்தாலும், அதை எடுத்து உன் தலையில் தேய்த்துக்கொண்டு வா, சுத்தமாகி விடுவாய் என்றார். அப்படியே ஆகட்டும் பெண்ணே என்று மீண்டும் ஓடினான். அப்போது மாட்டின் குளம்படியில் சிறிது நீர் இருக்கும்படி செய்தார். ஆவலோடு அதை எடுத்தான் தலையில் தேய்த்தான். எரிந்து சாம்பலாகிப்போனான்.*

*அப்போது மோகினி அவதாரத்தில் இருந்த திருமால் (ஏழுமலையான்) ஈசுவரனைப் பார்த்து மாமா நீ வா என்றார். சிவன் பயப்படுகிறார், எப்படி என்று கேட்கும்போது மாமனும் மச்சானும் சேர்ந்தனர். அதனால் இரண்டு குழந்தைகள் பிறந்தனர்.*

*1. வேடியப்பன், 2. ஐயனாரப்பன்*

*இவர்கள் காட்டில் பிறந்தவர்கள். இவர்கள் ஊருக்குள் வரக்கூடாது. கானகத்தில் பிறந்தவர்கள் காடாளக் கடவது என்றுள்ளனர். வேடியப்பன் கோயிலுக்குள் பெண்கள் வரக்கூடாது. ஏனென்றால் இவர் ஆணும் ஆணும் சேர்ந்து பிறந்தவர். இவருக்குப் பெண் வாசனையே பிக்காது. (சு.பஞ்சாட்சரம் 18-06-2006).*

*நாட்டுப்புறக் கதைகளில் தெய்வங்கள் இரண்டு முக்கியத் தன்மையைப் பெற்றுள்ளனர். அவர்கள் மரணத்தில் தோன்றினாலும், வேள்விகளில் தோன்றினாலும், சிவன், பார்வதி தொடர்பில் தோன்றினாலும் தெய்வக் கதாப்பாத்திரங்களை இரண்டு வகைப்பாட்டுக்குள் அடக்கிவிட முடியும். அவை (1) தெய்வங்கள் நேரடியாக பூமியில் அவதரித்தல் ஒருவகை (2) மனிதனாக மாற்று உருவத்தில் நடமாடுதல் மற்றொரு வகை. தெய்வ உருவத்திலே இருந்தவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்கின்றனர். இப்படியான கதாபாத்திரங்களுக்கு எதிர்காலத்தில் நடக்கப்போவது முன்கூட்டியே அறிதல், இயற்கையைப் புரிந்து கொள்ளுதல், இயற்கையைக் கட்டுப்படுத்துதல் போன்ற ஆற்றல்கள் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கும். மனித உருவத்தில் இருந்தவர்கள் நற்பண்பு, அச்சம், உண்மைக்குப் போராடுதல், நீதியை நிலைநாட்டுதல் போன்ற குணங்களைப் பெற்றிருப்பர். இவ்வகை மனித உருவத்தில் நடமாடிய நாட்டுப்புறத் தெய்வ கதைமாந்தர்களுக்கு வரலாற்று நிகழ்வுகள் இருக்கும். ஆனாலும் அவர்களை சிவன், திருமால் இவர்களோடு இணைத்து வரம் பெற்றவர்களாகக் கூறப்படும். அல்லது தீமையை அழிக்க பூமியில் தோன்றி இருந்ததாகக் கூறுவர். இந்த வகை வேடியப்பன் வழிபாடு வரலாற்றுப் பின்னணியும், நாட்டுப்புற நம்பிக்கையும் கலந்ததாக உள்ளது. வேடியப்பன் தோற்றத்தில் சிவன், திருமால் இணைவும் கூறப்படுகிறது.*

*தொகுப்புரை*

*வெட்சி, கரந்தை போர்களில் மாண்ட வீரர்களின் நினைவாக எடுப்பித்த நடுகற்கள் வேடியப்பன் என்கிற நாட்டுப்புற தெய்வமாக வணங்கப்படுவது நிருவப்பட்டது. நடுகல் வழிபாடு தமிழ்ப்பண்பாட்டின் அடையாளமாகவும் வீரயுக வாழ்வியலின் எச்சமாகவும் தொடர்கிறது. பொதுவாகவே நாட்டுப்புறவியலில் தெய்வங்களின் தோற்றத்தை சிவன், திருமாலோடு தொடர்புபடுத்துவது உற்று நோக்க முடிந்தது. வேடியப்பன் வழிபாடு வட தமிழகத்தின் தனித்த அடையாளமாகும். அவற்றோடு தொல்காப்பியம், புறநானூறு போன்ற தமிழ் அறிவு நூல்கள் வழி அறியப்படும் கருத்தியல்கள் மாறாது மிச்சமிருப்பதை இவ்வழிபாட்டில் காணமுடிகிறது. ஆதலால் வேடியப்பன் வழிபாடு தமிழ்ப்பண்பாட்டில் வீரயுகத்தின் அடையாள நீட்சி என்பது மெய்ப்பிக்கப்பட்டது.*

*அடிக்குறிப்புகள்*


| | | |
|---|---|---|
| *1. சுப்பிரமணியன் ச.வே ப.ஆ (2010)* | - | *புறநானூறு மூலமும் தெளிவுரையும் மணிவாசகர் பதிப்பகம் சென்னை- 108* |
| *2. சுப்பிரமணியன் ச.வே ப.ஆ (2003)* | - | *தொல்காப்பியம் (தெளிவுரை) மணிவாசகர் பதிப்பகம் சென்னை – 108* |
| *3. சண்முக சுந்தரம் சு (2003)* | - | *நாட்டுப்புறவியல் காவ்யா பதிப்பகம் சென்னை – 24* |
| *4. மேலது* | | |
| *5. பிச்சை. அ (2003)* | - | *தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை – 113.* |


********* ********* ********** ********* ********* ********** ********** **********